# டாக்டர் கொலவின் பதவிப்பிரமாணம்

## சபையின் முன்வரிசையில் அமர்ந்தார்

கொழும்பு, வியாழன் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் அகலவத்தை எம். பி.யாகப் பதவிப்பிரமானம் செய்து கொண்டார்.

நேற்று அகலவத்தையில் நடைபெற்ற உபதேர்தலில் தம்முடன் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் திரு. டேவிட் அப்புகாமியை 343 வாக்குகளால் தோற்கடித்த டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் அகலவத்தைத்தொகுதி எம். பி.யாக சபாநாயகர் முன் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இன்று காலை 6-33மணிக்குத்தான் டாக்டர் கொல்வின் அகலவத்தைத்தொகுதி எம். பி. யாகத்தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இன்று பிற்பகல் டாக்டர் கொல்வின் பார்லிமெண்ட் கட்டிடத்தின் வாசலில் வந்திறங்கியதும், அவரது

(6-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் 889

National Tamil Daily

இதழ் 97
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 5 ஸபர் 8 வெள்ளிக்கிழமை [19-5-67]

# ஆகஸ்டில் ஆசிரியர் பெருமளவில் இடமாற்றம்

## பட்டதாரி ஆசிரியர் தட்டுப்பாடு நீங்க திட்டம்

கொழும்பு, வியாழன் கொழும்பில் மேலதிகமாகவுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

இந்த இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ள விரும்பாதவர்கள் பென்ஷன் வசதியுடன் சேவையிலிருந்து ஒய்வு பெறுவதற்கு அனுமதியளிக்கப்படுவரென்று தெரிகிறது.

ஆகஸ்ட் முதல் திகதியிலிருந்து பெரிய அளவில் இந்த இடமாற்றத்திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது. வெளியூர்களில் பட்டதாரி ஆசிரியர் குறைவாக இருப்பதாலும், இதே சமயம் கொழும்பில் பட்டதாரி ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாலும் இந்த நிலைமையைச் சமமாக்கும் நோக்கத்துடனேயே இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

## 'எங்களைச் சேருங்கள் முகமதலியை விடுங்கள்'

### அமெரிக்க அரசாங்கத்திடம் முஸ்லிம் இளைஞர்கள் கோரிக்கை

கொழும்பு, வியாழன் முகமதலி [காஷியஸ்கிளே]க்குப் பதிலாக தாம் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்து கடமையாற்றத் தயாரெனவும் இஸ்லாமிய சகோதரத்துவத்துக்காகத் தாம் தமது உயிரையே தியாகம் செய்ய சித்தமாக இருப்பதாகவும் இலங்கையைச் சேர்ந்த 9 முஸ்லிம் இளைஞர்கள் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரிடம் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

முகமதலிக்கு உலக அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் பட்டம் அல்லாஹ்வின் கருணையால் கிடைத்

[5-ம் பக்கம் பார்க்க]

தைலங்களின் அரசன்!

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

ஒவ்வொரு யாழ்ப்பாண வாசியும் வாங்கி உபயோகிப்பது இதுவேதான்!!

எங்குமே கிடைக்கும்!

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 142-வது சுவீப் முடிவுகள் வருமாறு -

முதலாவது பரிசு

42 H 0738 ரூபா 100,000

இரண்டாவது பரிசு

47 M 0947 ரூபா 40,000

மூன்றாவது பரிசு

50 O 0636 ரூபா 10,000

ரூபா 1256 பரிசு பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 17 O 0957 | 19 L 0506 |
| 33 P 0983 | 28 Y 0261 |
| 34 A 0051 | 07 W 0422 |
| 53 L 0565 | 28 F 0333 |
| 10 X 0860 | 49 Y 0965 |
| 20 D 0113 | 02 D 0154 |
| 16 R 0761 | 05 U 0006 |

[6-ம் பக்கம் பார்க்க]

அரசாங்கக்கட்சிக் கூட்டம்

## உள்ளூராட்சி சேவை மசோதாபற்றி ஆலோசனை

கொழும்பு, வியாழன் உள்ளூராட்சி சேவை மசோதாவை இன்று அரசாங்கக்கட்சியின் பார்லிமெண்டரிக்குழு விவாதித்தது.

மசோதாவில் பல அம்சங்களை அங்கத்தவர்கள் பலர் ஆட்சேபித்தார்கள். மந்திரிக்கு இந்த மசோதா அதிகமான அதிகாரங்களைக் கொடுக்கின்றது என்று அவர்களில் சிலர் கூறினார்கள்.

உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் மசோதாவின் எல்லா அம்சங்களையும் குழுவினருக்கு விளக்கப்படுத்தினார்.

உள்ளூராட்சி மன்றங்கள் அமைதியாகவும் திறமையாகவும் செயல்படுவதற்கு ஏற்ற வகையி

[6-ம் பக்கம் பார்க்க]

மாவட்டசபை மசோதா

## செனட்டர் சூசாவின் கிண்டல் கேள்வி

### மந்திரியின் சூடான பதில்

கொழும்பு, வியாழன் மாவட்டசபைகள் மசோதா? தயாராகி விட்டதா, அதன் நிலைமை என்ன என்று செனட்டர் டொரிக்டி சூசா இன்று செனட்சபையில் உள்ளூராட்சி மந்திரி திரு. திருச்செல்வத்திடம் கேட்டார்.

மந்திரி: பிரதம மந்திரி அண்மையில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையைப் பாருங்கள்.

சூசா: பத்திரிகைகளைப்பற்றி எனக்கு கவலையில்லை யென மந்திரியிடமிருந்து பதிலை எதிர்பார்க்கின்றேன்.

மந்திரி: இதற்கு மேல் இப்போது நான் சொல்லக் கூடிய தொன்றுமில்லை. அந்த அறிக்கை பிரதம மந்திரியால் விடுக்கப்பட்டது அதில் நிலைமை

[6-ம் பக்கம் பார்க்க]

பிரதிநிதிகள் சபையில்

## சேர் ராஸீக் பரீத் குழுக்களின் உபதலைவர்

கொழும்பு, வியாழன் பிரதிநிதிகள் சபை குழுக்களின் உபதலைவராக இன்று சேர்ராஸீக் பரீத் தெரிவு செய்யப்பட்டார்.

அண்மையில் காலமான நீர்கொழும்பு எம். பி. திரு. குவின்ரின் பெர்னாண்டோ வகித்த பதவிக்கு இன்று சபையில் தேர்தல் நடைபெற்றது.

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா சேர் ராஸீக் பரீதின் பெயரைப் பிரேரித்தார்.

எதிர்க்கட்சியின் சார்பில் டாக்டர் என்.எம். பெரேரா பேசுகையில் இத் தேர்தல் பற்றி எதிர்க்கட்சியினர்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனத் திருப்தி என்பது ஒரு தெய்வீகக் குணம். உங்களுக்கு மனத் திருப்தி இருப்பின் சிங்காசனத்திலிருந்தாலும் அல்லது நடைபாதையில் படுத்திருப்பினும் எப்போதும் சந்தோஷமாக இருக்கலாம். வெளிநிலைமை உங்களைப் பாதிக்கவே செய்யாது.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு
வைகாசி மீ 5வ. (19-5-67)

## உபதேர்தல் படிப்பினை

அகலவத்தை உபதேர்தலில் எதிர்க்கட்சிக் கூட்டணி அபேட்சகர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வெற்றிபெற்றிருக்கிருர். இந்த வெற்றி எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆயினும் உபதேர்தலில் எதிர்க்கட்சியினர் செய்த பிரசாரத்தையும் எதிர்க்கட்சி அபேட்சகருக்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்குகளையும் கொண்டு பார்த்தால் இந்த வெற்றிபற்றி எதிர்க்கட்சியினர் பெருமை கொள்வதற்கு இடமில்லையென்றுகூறலாம் ஆளும்கட்சி அபேட்சகர் தோல்வியடைந்துள்ள போதிலும் இந்தத் தோல்வியைக் கண்டு அவர்கள் கவலை கொள்ள வேண்டியதில்லை. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா சிறந்த பேச்சாளர்களில் ஒருவர். பார்லிமெண்ட் நடைமுறைகள் நன்கு தெரிந்த அனுபவஸ்தர்; அரசியல் தலைவர்களில் ஒருவர். சென்ற பொதுத் தேர்தலில் அவர் பார்லிமெண்டுக்குத் தெரிவுசெய்யப்படாவிட்டாலும் இந்த உபதேர்தலில் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் பார்லிமெண்ட் விவாதங்கள் கலகலப்பாக இருக்க ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

அகலவத்தைத்தொகுதி இதுவரை ஓர் இடதுசாரித் தொகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. இத்தொகுதிக்கு இதுவரை பிரதிநிதித்துவம் வகித்துவந்த திரு. அனில் முனசிங்கா லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களில் ஒருவர். முன்னைய கூட்டரசாங்கத்தில் போக்குவரத்து மந்திரியாக இருந்து தமது தொகுதிக்கும் பல நல்ல காரியங்களைச் செய்தவர். தேர்தல் ஆட்சேப மனுக் காரணமாக அவர் ஸ்தானமிழந்தார். இதன் விளைவாகவே இந்த உபதேர்தல் நடைபெற்றது. லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இந்த உபதேர்தலில் வெற்றியீட்டியது ஆச்சரியமல்ல. எதிர்க்கட்சி கூட்டணி தனது ஸ்தானத்தை இழந்துவிடாமல் இந்த உபதேர்தலிலும் காப்பாற்றியிருக்கிறது. அவ்வளவுதான். சென்ற பொதுத்தேர்தலில் அதாவது 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட திரு. அனில் முனசிங்கா, அன்று தம்முடன் போட்டியிட்ட யு. என். பி. அபேட்சகரான திரு. டேவிட்அப்புகாமியைவிட ஐயாயிரத்துக்கு அதிகமான வாக்குகளால் வெற்றியீட்டியிருந்தார். பொதுத் தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியினர் செய்த பிரசாரத்தைவிட இந்த உபதேர்தலில் வகுப்புவாதம் அதிகமாக அவர்களது பிரசாரத்தில் இடம்பெற்றிருந்தது. மாவட்டசபைகள்அமைக்கப்பட்டால் வடக்கே போவதற்கு 'பாஸ்போர்ட்' தேவை வருமென்றும் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவும் நிறைவேறி மாவட்ட சபைகளும் அமைக்கப்பட்டால் சிங்களவர் இந்நாட்டில்வாழ முடியாதென்றும் தமிழர் ஆட்சி இங்கு ஏற்பட்டுவிடுமென்றும்கூட எதிர்க்கட்சியின் பொறுப்புள்ள தலைவர்கள் சிலர் கூடப் பிரசாரம் செய்தனர். எனினும் பொதுத்தேர்தலில் கிடைத்த ஆதரவு இந்த உபதேர்தலில் வெகுவாகக் குறைந்திருக்கிறது. சென்ற தேர்தலில் ஐயாயிரத்துக்கு அதிகமான வாக்குகளை அதிகப்படியாகப் பெற்ற எதிர்க்கட்சியினர் இந்த உபதேர்தலில் முன்னூற்றி நாற்பத்து மூன்று வாக்குகளையே பெற்றிருக்கின்றனர். வகுப்புவாதப் பிரசாரத்துக்கு தென்னிலங்கை மக்கள் இனியும் இடம் கொடுக்க மாட்டார்களென்பதை இது எடுத்துக் காட்டுகிறது. யு. என். பி. அபேட்சகரை ஆதரித்துப் பிரசாரம் செய்த பிரதமரும் மற்றும் பலரும் தேசிய ஐக்கியத்தையே வலியுறுத்தினர். ஆளும்கட்சி அபேட்சகர் தோல்வியடைந்தாலும் கூட, சென்ற தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட இந்த உபதேர்தலில் அவர் அதிகப்படியான வாக்குகள் பெற்றிருப்பது தேசிய ஐக்கியத்தின் அவசியத்தை தென்னிலங்கை மக்கள் உணர்ந்துவிட்டார்களென்பதற்கு எடுத்துக்காட்டு.

தேசிய ஐக்கியத்தை வளர்த்து நிலைநாட்ட முடியும் என்பதற்குஇந்த உபதேர்தல் முடிவு ஓர் அறிகுறி. தேர்தல் வெற்றி தோல்விபற்றிக் கவலைப்படாமல் தேசிய ஐக்கியத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்குத் துணிவுதான் வேண்டும். இதேசமயம் வகுப்புவாதப் பிரசாரம் இனியும் வெற்றிபெருதென்பதை உணர்ந்து எதிர்க்கட்சியினரும் தமது போக்கை மாற்றிக் கொள்வது அவர்களுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. இதுவே இந்த உபதேர்தல் முடிவு தந்த பாடமாக இருக்க வேண்டும்.

மாவட்டசபைகள் கருத்தரங்கு

# நிர்வாகத்தைப் பரவலாக்க மாவட்டசபை வழிவகுக்கும்

**— கயிலாசன் பத்மநாதன், கொழுமபு —**

ஒரு நாட்டில் பல்வேறு மத, மொழிப்பிரிவினர் வாழுங்கால், உண்மையான மக்கள் ஆட்சியில் பல்வேறு மத, மொழிப்பிரிவினர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். நிறைவான சிறுபான்மையே முறையான மக்கள் ஆட்சிக்கு அளவுகோலாகும். தலைகளை மட்டும் எண்ணுவதை மக்கள் ஆட்சியின் அடிப்படைக் குணமென்று கருதுதல் தவருகும்.

நாடுகளில் பல்வேறு பிரிவினரும் பரவலாக நாடெங்கணும் கலந்து வாழின் அப்பிரிவினர் எல்லோரினது மொழியும், மதமும் பாதுகாக்கப்படவேண்டும் — அரசியலமைப்பில் மொழி, மதச் சம உரிமைகள் அளிக்கப்படவேண்டும். மதத்தையும் அரசியலையும் தொடர்புபடுத்துங்கால் மதத்தின் புனிதத் தன்மை கெடக்கூடும் என்பதால் மதத்தை அரசியலுடன் பின்னிப் பிணைக்காது அடிப்படை உரிமைகளில் ஒன்ருக மதச் சுதந்திரத்தையும் அரசியலமைப்பில் இடம்பெறச் செய்வதற்கு அப்பால் அரசாங்கம் மத விஷயங்களில் தலையிடாது இருக்கவேண்டும்.

மொழியை அரசியலில் இருந்து பிரிக்கமுடியாது. ஒவ்வொரு குடிமகனும் தன் மொழியில் தன் அரசாங்கம் இயங்குவதையே விரும்புகிருன். தன் மொழி அல்லாத ஒரு மொழியை ஒருவன் மேல் திணிக்க முனைவதும், ஆளப்படுவதும் அடிமை நாடுகளிற்ருன் காணமுடியும்.

இதனுலேயே பல நாடுகளில் பல மொழிகள் [பத்து மொழிகள் கூட] ஆட்சி மொழியாக அரசியல் அமைப்பில் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. பன்மொழி ஆட்சியால் நிர்வாகச் செலவு பன்மடங்காக அதிகரிப்பினும் மக்களாட்சியின் புனிதப்பண்பை மாசுபடுத்தாத வகையில் சகல மொழிகளுக்கும் உரிய நிலையைக் கொடுத்து மக்கள் ஆட்சிப் பண்பைப் பேணவிரும்புகின்றனர் பண்பாளர்.

அதேபோலப் பரவலாக மக்கள் கலந்து வாழாது ஒவ்வோர் இனமும் தனக்கென வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் தொன்றுதொட்டே வாழின், முன் குறிப்பிட்ட நிர்வாகச் சிக்கலைத் தடுத்து செலவைக் குறைக்கும். அதேநேரத்தில் ஒவ்வொரு பிரிவினரும் தம் மொழி, பண்பாடு, கலை, நிலம் என்பவற்றை வளம்படுத்த இணைப்பாட்சி முறையைத் துணைக்கொள்கின்றனர்.

இணைப்பாட்சி முறையில் பல்வேறு பிரிவுகளுக்கிடையிலும் ஒற்றுமை வளர்கின்றது. அரசியலில் ஒவ்வொரு பிரிவினரும் தமக்குரிய பங்கு கிடைக்காதவிடத்து. தமக்கென நாடமைத்து வாழலாமா என்று சிந்திக்கத் தொடங்கிப் பிரிவினை எண்ணம் தலைதூக்காது தடுக்க இவ்விணைப்பாட்சி முறை உதவுகின்றது.

முழுமையான இணைப்பாட்சி முறையில் நாட்டின் சுதந்திரத்திற்கு முக்கியமான பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகியவற்றுடன் நாட்டிற்குப் பொதுவான நிதியையும் மத்திய அரசு கொண்டு மற்றைய பொறுப்புக்களை இணைப்பாட்சி அரசுகளிடம் ஒப்படைக்க வழியிருப்பதால் பல்வேறு பிரிவினரும் தம் மொழி, கலை, பண்பாடு என்பவற்றை வளர்த்து வாழ்வதுடன், சகோதரர்களாகத் தம் தாய் நாட்டை ஒரு குடைக்கீழ் வளம்பெறச்செய்யவும் உதவுகின்றது.

இலங்கையில் மொழிவாரியாகத் தமிழ்பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் வாழ்கின்றனர். தொன்றுதொட்டு வடக்கையும் கிழக்கையும் தம் தாயகமாகக்கொண்டு வாழும் தமிழ்பேசும் மக்களும், தெற்கே கரையோரப்பகுதியாக வாழும் கீழ்நாட்டுச் சிங்களவர்களும், மலைநாட்டில் வாழும் கண்டியச் சிங்களவர்களும் தமது தனித்துவத்தைநிலைநாட்ட முயன்று வருவதை அறிவோம். இன்றும் கண்டியச் சிங்களவர் தம் தனித்தன்மை, உரிமை எல்லாம் பறிக்கப்பட்டுவிட்டதே என்று குமுறுவதையும் நாம் அறிவோம்.

இந்த நிலையிற்ருன் இணைப்பாட்சி முறையில் இரண்டிற்கு மேற்பட்ட அரசுகளைக்கொண்ட ஐக்கிய இலங்கை ஒன்றை உருவாக்குவதைப் பற்றி ஈழத்து இணைப்பாட்சித் தந்தையான காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இணைப்பாட்சிக் குரலை இந்நாட்டில் என்ருே எழுப்பினுர்.

தெற்கில் வகுப்புவாதம் தலைதூக்கி இலங்கை சிங்களவர்களுக்கு மாத்திரமே என்ற குரலை எழுப்பியபின்னர்தான் இணைப்பாட்சி முறையைப் பற்றித் தமிழ் பேசும் மக்கள் சிந்தித்தனர். இவ்வகுப்புவாதச் சூழ்நிலையில் இணைப்பாட்சி என்ருல் நாட்டுப் பிரிவினை என்ற பொய்ப்பிரசாரத்தைச் சில சிங்களத் தலைவர்கள் தெற்கே பரப்பியதால் இணைப்பாட்சி முறைபற்றிப் பேசுவதையே சிறிது காலம் தாமதிக்கவேண்டியிருக்கின்றது. இணைப்பாட்சி என்பது இரு இனங்களும் இணங்கியே பெற முடியும். வகுப்புவாதச் சூழ்நிலை மாறிச் சிங்கள மக்கள் சுயநிலைக்கு வருமட்டும், 'அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேயா'கத்தான் தெரியும்.

இதை உணர்ந்தே தமிழ் பேசும் மக்கள் இடைக்காலத் திட்டமாக ஒற்றையாட்சியின் கீழ் நிர்வாகத்தை மட்டும் பரவலாக்கும் மாவட்டசபை முறையை வரவேற்கின்றனர். இணைப்பாட்சி முறைக்கும் மாவட்டசபைகளுக்கும் முடிச்சுப்போட்டு குட்டையைக் குழப்பச் சிலர் முனைவது வருத்தப் படவேண்டிய ஒன்ருகும்.

## பண்புகள் பற்றி மாதாஜி

கொழும்பு, வியா.

''நாம் கல்லாலும் மண்ணுலும் கட்டிடங்களைக் கட்டுகிருேம் ஆனுல் நல்ல பண்புகள் வாய்த்தவனுக மனிதனைக் கட்டி எழுப்பத் தவறிவிடுகிருேம். ஒருவன் தன்னை நிறை மனிதனுக்க இது போன்ற வழிபாட்டுக் கூட்டங்கள் பெரிதும் உதவுகின்றன. இந்த நல்ல நிகழ்ச்சிகளை கொழும்பு திவ்யஜீவன சங்கம் நடாத்துவது வரவேற்கத் தக்கது.''

இவ்வாறு கொழும்பு திவ்ய ஜீவன சங்கத்தினர் டாக்டர் கே. நாகரெத்தினம் இல்லத்தில் நடாத்திய விசேஷ வழிபாட்டுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய திருகோணமலை சிவானந்த தபோவன அதிபர் மாதாஜி கூறினுர்.

ஸ்ரீ சுவாமிஒங்காரானந்தா பேசுகையில்''திவ்ய ஜீவன சங்கம் இன, மத, மொழி பேதங்களைத் தாண்டி எல்லோரையும் ஒன்ருக்குகின்றது. குருதேவர் சுவாமிசிவானந்த மகராஜ் உலகம் முழுவதையும் ஓர் ஆன்மீககுடும்பமாக்கினுர்'' என்ருர்.

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்தைச் சேர்ந்த திரு. மெய்ஞ்ஞான சுந்தரம், ஆசிரியை செல்வி மா. வள்ளிப்பிள்ளை ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## நாட்டிலும் நகரிலும்

நடுக் கடலில் இருப்பவன் பார்க்குமிடமெங்கும் தண்ணீர், பருகுவதற்கு ஒரு சொட்டு இல்லையே' என்று ஏங்குவது போல, இலங்கைத் தீவைச் சுற்றி வர கடல் சூழ்ந்திருந்தும் சகாயமான விலைக்கு போதுமான கடலுணவு எமக்கு கிடைப்பதில்லையே என்று நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது.

எங்கள் கடற்கரையோரமாக ஆயிரக்கணக்கான மீன்பிடி கிராமங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் லட்சக் கணக்கான மீனவர்கள் வாழ்கிருர்கள். மீன்பிடிப்பதையே பரம்பரை தொழிலாகப் பின் பற்றி வரும் இவர்கள் பெரும்பாலும் பழங்காலத்து மீன்பிடி முறைகளையே கையாண்டு வருகிருர்கள். நைலன் வலைகளும் யந்திரப் படகுகளும் தான் இவர்கள் கண்ட நவீன சாதனங்கள்.

ஆழ் கடலுக்குச் சென்று தொகையாக மீன் பிடிக்கக் கூடிய மீன்பிடி கப்பல்களோ பெரிய வலைகளோ, பிடித்த மீன்களைப் பழுது படாமல் சேகரித்து வைக்கும் குளிர் அறைகளோ எமது மீனவர்களுக்கு கிடைப்பதில்லை. ஏழ் கடல்களிலும் சென்று மீன் பிடித்து பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஜப்பான், கனடா போன்ற நாடுகளின் நிலைக்கு நாம் வராவிட்டாலும், நமது தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்காவது முன்னேற்றம் அடைய வேண்டும்.

தகரத்தில் அடைத்த மீனுக்கும் கருவாட்டுக்கும் நாம் இன்னும் பிற நாடுகளையே எதிர்பார்த்து ஏராளமான அந்நிய செலாவணியை வீணுக்குகிருேம்.

மீன்பிடி தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டியது ஓர் அத்தியாவசிய தேவை. இப் பொறுப்பு இப்பொழுது மீன்பிடி கூட்டுத்தாபனத்திடம் தங்கியுள்ளது.

மீன்பிடி தொழில் ஓர் அரசாங்க இலாகாவிடம் இருந்த போது, ஐரோப்பிய நாடொன்றில் வாங்கிய மீன்பிடி கப்பல் ஆறு மாதம் தொடர்ந்து தொழிற் படாமல் வாங்கிய விலையின் பத்திலொரு பாகத்துக்கு விற்க வேண்டி வந்த கோளாறுகள் இனிமேல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

கரையோரமாகவுள்ள பல மீன்பிடி துறைகளை பெருப்பித்து நவீனமாக்க வேண்டும். இது சம்பந்தமாக, சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த ஒரு ஜேர்மன் நிபுணர் நமது கரையோரமாக சுற்றிப் பார்த்துவிட்டு நீர்கொழும்பு. கற்பிட்டி, மன்ஞர், தொண்டைமாஞறு, முல்லைத்தீவு, ஊர்காவற்றுறை, வாழைச்சேனை, அறுகன்குடா, அம்பாந்தோட்டை ஆகிய மீன்பிடி துறைகளை அபிவிருத்தி செய்யலாமென்று சிபார்சு கூறியிருப்பது வரவேற்கத் தக்கது.

மேலே சொல்லப்பட்ட இடங்களில் மிகப் பெரும்பாலானவை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இக்காரணத்தால் அவற்றை அபிவிருத்தி செய்யும் வேலையில் அரசாங்கம் அசிரத்தையாயிருக்கப்படாது. வடக்கு வாழ்ந்து விடுமே என்ற எரிச்சலை வளரவிடாமல்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் எல்லையில் எகிப்திய துருப்புகள்

## நெருக்கடி நிலைமை உருவாகிறது

### பிரதமர் இந்திராவுக்கு நாஸர் கடிதம்

கெய்ரோ, மே 18

இஸ்ரேல் எல்லையைச் சார்ந்துள்ள சினுய் பாலைவனத்தில், எகிப்திய துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளதாக அதிகார பூர்வமான செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கிய அரபுக் குடியரசுப் படையின் உதவித் தலைமைத் தளபதி, பீல்ட் மார்ஷல் ஹக்கீம் ஆமர், அங்கு நிறுவப்பட்டுள்ள இராவணுத் தலைமைக் காரியாலயத்துக்குச் சென்றுள்ளார்.

சிரியாவுக்கு எதிராக இஸ்ரேல் இராணுவத் தாக்குதலில் இறங்கும் பட்சத்தில்; இஸ்ரேலுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான பொறுப்பை ஏற்றுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து, பீல்ட் மார்ஷல் ஹக்கீம் பேசினார்.

**துருப்புக்கள் இடமாற்றம்**

பெரிய அளவில் துருப்புகள் கெயிரோவிலிருந்தும் அதன் சுற்றுப் புறங்களிலிருந்தும் சினுய் பாலைவனத்துக்கு அகற்றப் பட்டுள்ள போதும், பாலங்கள், கேந்திர ஸ்தானங்கள், முக்கிய நிலையங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை எகிப்திய பொலிசார் பொறுப்பேற்றுள்ளனர்.

இதற்கிடையில், சிவில் பாதுகாப்புப் பயிற்சிகளுக்கான திட்டங்களை இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

**ஆயத்த நிலையில் இராணுவம்**

ஐக்கிய அரபுக் குடியரசும், சிரியாவும் எந்தத் தாக்குதலையும் எதிர்க்கச் சகல ஆயத்தங்களையும் செய்த நிலையில் உள்ளதாகத் தெரிகிறது. தற்போது டமாஸ்கசிலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசின் இராணுவத் தலைவர் ஜெனரல் முகம்மது பாஸியின் மேற்பார்வையின் கீழ், இரு நாடுகளின் துருப்புகளினதும் உயர் அதிகாரிகள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனரெனவும் செய்திகள் கூறுகின்றன.

**தெருக்கள் மூடப்பட்டன**

ஒரு முழு ஆயுதந்தாங்கிய இராணுவப் பிரிவு சினுய் எல்லையை அடைந்துள்ளது. மென்பார, கனரக டாங்கிகள், இயந்திர துப்பாக்கிகள், துருப்புகள் ஆகியவற்றை 20 விசேஷ ரயில்கள் வட கிழக்குக்குக் கொண்டு சென்றன. இஸ்மெயிரியாவுக்கும், சூயசுக்கும் கிழக்கே, இராணுவத் துருப்புகளின் போக்குவரத்துக்கு வசதியாய் தெருக்கள் மூடப்பட்டன.

விமானத் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் கெயிரோவைச் சுற்றிப் பலப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்க கட்டிடங்கள், தொழிற்சாலைகள், வங்கிகள், பாலங்கள், வெளிநாட்டுத் தூதராலயங்கள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**இந்திராவுக்கு நாஸர் கடிதம்**

மேற்கு ஆசியாவின் கவலை தரும் நிலைபற்றி, ஐக்கிய அரபுக் குடியரசின் தலைவர் நாஸர் இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள தனிப் பட்ட கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

சிரியாவை இஸ்ரேல் தாக்கினுல் தனது நாடு அதில் குறுக்கிட வேண்டிய நிலை ஏற்படுமென நாஸர் குறிப்பிட்டுள்ளார்.

சிரியாவுக்கு எதிராக பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட இஸ்ரேல் முடிவு செய்திருப்பதாக ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் இந்தியப் பிரதமர் உட்பட யூகோஸ்லேயாவுக்கும், ரஷ்யாவுக்கும் இதே போன்ற கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

## பத்திரிகையாளர் குற்றச்சாட்டு

பம்பாய். மே 18

உழைப்பு பத்திரிகையாளர் சங்க காரியகமிட்டி இங்கு தனது மூன்று நாள் கூட்டத்தை முடித்துக் கொண்டது. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கு சம்பளம் வகுப்பதில் சம்பள போர்ட் தவறிவிட்டதாக கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

## டிட்டோவுக்கு ஸாகிர் ஹுசேன் வாழ்த்து

புதுடில்லி, மே 18

யூகோஸ்லேவியாவின் அதிபராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள டிட்டோவுக்கு இந்தியாவின் புதிய ஜனுதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசேன் வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

'நமது நாட்டுக்கும் தங்கள் நாட்டுக்குமிடையிலுள்ள உறவும், பிணைப்பும் மேலும் இறுக்கமும், பலமும் அடையவேண்டும்' என அவ்வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்,

## ஆதரவு ஆர்ப்பாட்டம்

நியுயோர்க். மே 18

அமெரிக்காவின், நியுயோர்க் நகரில் கடந்த சனிக்கிழமையன்று, வியட்நாமில் போர்புரியும் அமெரிக்கர்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் ஒன்று அதி சிறப்பாக நடைபெற்றது. நியுயோர்க் 5-வது தெருவினுல் இந்த ஊர்வலம் செல்ல எட்டு மணி நேரம் பிடித்தது. ஆயிரக்கணக்கானவர்கள் கொடிகளைத் தாங்கிய வண்ணம் இவ்வூர்வலத்தில் சென்றனர். ஏறத்தாழ 250,000 பேர்வரை இந்த ஊர்வலத்தில் சென்றனர் என்று கணக்கிடப்பட்டது.

## வீதி திருத்தம்

சுழிபுரம், வியா

சுழிபுரம்-பறுளைவீதி செப்பனிடப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக மிகவும் மோசமான நிலையிலிருந்த இவ்வீதியால் சென்றவர்கள் மிகுந்த கஷ்டப் அடைந்தனர். தற்பொழுது இவ்வீதியால் செல்லும்மக்கள் எவ்வித கஷ்டமுமின்றி செல்லக்கூடியதாகவிருக்கின்றது.

பஞ்சத்தைப் போக்க

## பல ராஜ்யங்கள் கைகொடுத்து உதவின

### பீகார் சட்ட மந்திரி நன்றி கூறுகிறுர்

பீகார், மே. 18

பஞ்சத்தாலும் பட்டினியாலும் மோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருந்த பீகாருக்கு நாட்டின் பல ராஜ்யங்களும் கைகொடுத்து உதவியளித்திருப்பதாக பீகார் சட்டமந்திரி ரஹ்மான் நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவித்திருக்கிறுர்.

மந்திரி ரஹ்மான் பீகார் மக்களைவெகுவாகப் பாராட்டி இங்கு தெரிவித்தார். ''தோழமைஉறவும், கருணை இரக்க உள்ளமும் கொண்ட கேரள மக்கள்'' என்று கூறினுர்.

கேரளமே உணவு நெருக்கடியில் இருக்கும்போது பீகாருக்கு 3 லட்சம் ரூபாய் பெறுமதியான உணவு உதவி அளித்திருப்பதை எப்படி மறக்கமுடியும் என்றுர் மந்திரி.

மைசூர் அரசாங்கம் பீகாருக்கு பிரதமர் வரட்சிநிதி உதவியாக 50,000 ரூபாய் அளித்திருப்பதாக சட்ட மந்திரி தெரிவித்தார்.

## அஞ்சலி

உடுப்பிட்டி, வியாழன்

அல்வாய் தெற்கு சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 35 வருடங்களாகத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. கே. ஸி. சதாசிவத்தின் ஓராண்டு ஞாபகார்த்த விழா அல்வாய் பாரதிதாசன் படிப்பகத்தில் திரு. எஸ். தங்கராசா தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ஏ. தேவச்சந்திரன், எம், சிவபாலன், பண்டிதர் க. நடராசா, ஆசிரியர் வீரகத்தி உட்படவேறு பலரும் பேசினர்.

## டயர் விநியோகம் பற்றி புகார்

சங்கானை, வியாழன்

மோட்டார் வாகன உரித்தாளருக்கு இரண்டு டயர் ரியூப் விநியோகம் செய்ய வேண்டுமென்ற அரசாங்க விதிக்கிணங்கச் சங்கானையைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனத்தில் ரயர் ரியூப் வாங்கச் சென்றபோது இரண்டு சோடி ரயர் ரியூப்பிற்குப் பதிலாக ஒன்றுமட்டும் விநியோகம் செய்து பல சாக்குப்போக்குகள் சொல்லி அவரை தந்திரமாக அனுப்பிவைத்துள்ளனராம். அவர் வெகுநேரம் வாதாடியும் பலன்கிட்டாததால் அரசாங்க அதிபருக்கு புகார் செய்துள்ளதாக தெரியவருகிறது.

## விஞ்ஞானமாநாடு

புன்னுலைக்கட்டுவன், வியா

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர்சங்கத்தால் நடாத்தப்படும் வருடாந்த விஞ்ஞானமாநாடும் பொருட்காட்சியும் இம்முறை 19-ம் திகதியிலிருந்து 3 தினங்கள் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாயும், இதில் பல்கலைகழகப் பேராசிரியர் பலரும் வெளிநாட்டுத் தூதுவரும் பங்குபற்றுவாரெனவும் தெரிகிறது.

## பஸ் பிரயாணிகள் அதிருப்தி

புன்னுலைக்கட்டுவன், வியா.

யாழ்ப்பாணப்பிரதேசத்திலுள்ள இ.போ.ச.பஸ்வண்டிகள் துடைப்பதற்கென ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் அநேகபஸ் வண்டிகள் துப்புரவுசெய்யப்படாததன் விளைவாக தூயஉடையுடன் பிரயாணம் செய்பவர்கள் தங்கள் உடைகளில் அழுக்கை ஏற்றிக்கொண்டு இறங்க வேண்டியுள்ளது. பிரயாணிகள் இதுபற்றி அதிருப்தி கொண்டுள்ளனர்.

## தொழிலாளர் தினம்

ஆனையிறவு, வியா.

பரந்தன் ரசாயன தொழிலாளர்சங்கம்இம்மாதம்28ந் திகதி தொழிலாளர் தினத்தைக்கொண்டாட இருக்கின்றது. முக்கிய பேச்சாளராக யாழ்ப்பாணம் எம்.பி. திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் கலந்து கொள்வாரெனத் தெரியவருகிறது.

## வீட்டுத்தோட்டப் போட்டி

சங்கானை, வியாழன்

சங்கானை முன்னுள் பொலிஸ்நிலைய அதிபர் திரு. எஸ். ரி. மெண்டிஸினுல் தொடக்கி வைக்கப்பட்ட பாடசாலை வீட்டுத்தோட்டப் போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டு வருவதால் இதில் பங்கு பற்றிய பாடசாலைகளும், வீட்டுத் தோட்டம்செய்யும் சிறுவர் சிறுமிகளும் முதலாம் இடத்தைத் தட்டிக் கொள்வதற்காகத் தீவிர முயற்சியெடுத்து வருகின்றனர். இப்போட்டியை பார்வையிடுவதற்கு ஒரு குழு அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது.

## 'திறப்புவிழாக்களுக்கு மந்திரிகள் போகக்கூடாது'

### கேரள முதலமைச்சர் கருத்து

திருவனந்தபுரம், மே 18

அடிக்கல் நாட்டுவிழாக்களிலும், திறப்பு விழாக்களிலும் மந்திரிகள் காலத்தைப் போக்குவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமெனக் கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாத் தெரிவித்திருக்கிறுர்.

இங்குள்ள சஞ்சிகை ஒன்றுக்கு அவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பொதுமக்கள் நன்கு மந்திரிகளுடன் ஒத்துழைக்கவேண்டும். மந்திரிகள் இவ்விழாக்களில் கலந்து கொள்வதால் நாட்டுக்கு என்ன நன்மை வந்துவிடப் போகிறது? நாட்டுக்குப் பயனுள்ளதைப் பார்த்து மந்திரிகளை மக்கள் ஈடுபடுத்த வேண்டும் என்று அக்கட்டுரையில் திரு. நம்பூதிரிபாத் குறிப்பிட்டுள்ளார்.

## யுதாண்ட் பிரிட்டன் விஜயம் ரத்து

### மேற்கு ஆசிய பதட்ட நிலையே காரணம்?

நியூயார்க், மே 18

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தமது பிரிட்டன், பெல்ஜியம் விஜயத்தை ரத்துச்செய்துள்ளார். யுதாண்ட் தமது விஜயத்தை திடீரென்று ரத்துச் செய்துவிட்டார். இதற்குக் காரணம், மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையாகத்தான் இருக்கலாமென இங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

ஆனல் வேலைக் கஷ்டமே திரு. யுதாண்டின் ரத்துக்குக் காரணமென ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஐ. நா. மகாசபையின் கூட்டம் இவ்வாரத்தில் சில சமயங்களில் முடிவடையாதென எதிர்பார்ப்பதாலேயே அவர் தமது விஜயத்தை ரத்துச்செய்திருக்கிறுரெனவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

வியட்னும் பிரச்னை

## 'சமாதானப் பிரச்னைக்கு ஹனேய் உடன்படவேண்டும்'

### அமெரிக்க செனட்டர்கள் கோரிக்கை

வாஷிங்டன், மே 18

நீண்ட காலமாக நடைபெற்றுக்கொண்டு வரும் வியட்னும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர ஹனேய் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு [illegible] அமெரிக்க செனட்டர்கள் பதினுறுபேர் அறிக்கை ஒன்றில் கோரியிருக்கிறுர்கள்.

செனட்டர் றெபர்ட் கென்னடியின் தலைமையிலான இந்தச் செனட்டர்கள் கோஷ்டி சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் வியட்னும் போரை தீர்வுக்குக் கொண்டுவரலாமென நம்பிக்கை தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்க ஜனுதிபதி இந்த அறிக்கை பற்றிக் குறிப்பிடுகையில் தன்னுடன் இதுபற்றிக் கலந்தாலோசிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லைசன்ஸ் இல்லாத பஸ் கண்டக்டர்

காங்கேசன்துறை, வியா.
பஸ் கண்டக்டர் பதவிக்கான லைசென்ஸ் இல்லாமல் இ. போ. ச. பஸ் ஒன்றில் கண்டக்டராக கடமையாற்றியதாக எம். பத்மநாதன் என்பவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டி காங்கேசன்துறை போக்குவரத்து பொலிஸ்சார்ஜன்ட் எம்.பி. வேலுவினால் தொடரப்பட்ட வழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சென்றவருடம் ஜனவரி மாதம் 13ம்திகதி பிரஸ்தாப கண்டக்டருக்கான லைசென்ஸ் இல்லாமல் இ.போ.ச. பஸ் ஒன்றில் கடமையாற்றியது தவறு என்றும் இப்படியான தவறை இனியும் செய்ய வேண்டாமென்றும் எதிரியை நீதவான் எச்சரித்து விடுதலைசெய்தார்.

---

## ஒருவர்காயம் இருவர் கைது

வல்வெட்டித்துறை, வியா.
பருத்தித்துறையைச் சேர்ந்த இரத்தினம் என்பவர் கையில் பலத்த வெட்டுக் காயத்துடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட சச்சரவு காரணமாகவே இவர் வெட்டுக் காயத்துக்கு இலக்கானர் என்று கூறப்படுகிறது பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு.வி.செல்லையா சந்தேகத்தின் பேரில் இரத்தினசிங்கம், தேவராசா ஆகிய இருவரையும் கைது செய்துள்ளார்.

---

## மாணவருக்குதண்டனை வழங்க முடியாது

கொழும்பு, வியா.
பள்ளிக்கூடக் கட்டணங்கள் கட்டவில்லை என்பதற்காக மாணவர்களுக்குத்தண்டனை வழங்கும் தனியார்பள்ளிக் கூடங்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. கட்டணம் கட்டவில்லையென்பதற்காக ஒரு பிள்ளையைத் தண்டிப்பது சட்டவிரோதமாகுமெனக் கல்வி அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் கூறினர்.

இதற்கிடையில் மாணவர்களிடமிருந்து பெற்ற விளையாட்டுக் கட்டணங்களின் கணக்குகளைச் சரிவர வைக்காத குற்றத்துக்காகப் பல பள்ளிக்கூடத் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

---

## கமக்காரருக்கு கடனாக 'டிராக்டர்'

கொழும்பு, வியா.
வருங்காலத்தில் கமக்காரர் ஒரு விவசாய கடன் திட்டத்தின் கீழ் 'டிராக்டர்' இயந்திரங்களை வாங்க முடியும். இத் திட்டம் உடனடியாக அமுல் நடத்தப்படும்.

செவ்வாயன்று கூடிய மந்திரிசபைத் துணைக் கமிட்டி இத்திட்டத்தை ஆராய்ந்தது. இத்திட்டத்தின்படி 1000 விவசாய டிராக்டர் இயந்திரங்களை இறக்குமதி செய்ய வங்கிகள் கடன் வசதிகள் அளிக்கும்.

---

## சமய தீட்சை

சங்கானை, வியா.
அகிலஇலங்கை வேதாகம சைவசித்தாந்தசபை ஆதரவில் சண்டிருப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தில் சமய தீட்சை நடைபெற்றது. அளவெட்டி திரு. ச. மன்றக் காட்டுக்குருக்கள் இவ்வைபத்தை நடாத்திய பின்னர் அவர் தீட்சை பெற்றுபஞ்சமாபாதகங்களை நீக்கி அறஞ்செய்து மோட்சமடைவதே சைவர்களாகப் பிறந்தோர் கடமையென்று விளக்கிக்கூறினர்.

# "சிறுபான்மையினரை அரசாங்கம் ஏமாற்றுகிறது"

### சமசமாஜ சம்மேளனத் தலைவர் பேச்சு

உடுப்பிட்டி, வியா.
"இலங்கையின் சரித்திரத்திலே இன்று போல் விலைவாசிகள் எப்பொழுதும் ஏறியதில்லை. மக்களுக்கு அன்ருட உணவுக்குத் தேவையான உபஉணவுப் பொருட்களுடன் தீப்பெட்டிக்கும் தட்டுப்பாடேற்பட்டுள்ளது தேசிய அரசாங்கம் பதவியேற்று இரண்டு ஆண்டுகளாகிவிட்டபோதிலும் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனம் படிப்படியாக ஏமாற்றப்பட்டே வருகின்றது. மாவட்ட சபை என்னும் பிரச்னையை வைத்துக் கொண்டு அரசாங்கம் தமிழரசுக்கட்சியை ஒருபுறமும், முஸ்லிம்களை மறுபுறமும் ஏமாற்றி வருகிறது."

மேற்கண்டவாறு கரவெட்டி முற்போக்கு வாலிபர் சங்க ஆண்டுக்கூட்டத்தில் வடபிரதேச சமசமாஜ வாலிபர் சம்மேளனத் தலைவர் டாக்டர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி பேசுகையில் கூறினர். இக்கூட்டத்திற்கு திரு. கே. வி. செல்லையா தலைமைவகித்தார்.

மாவட்ட சபைப் பிரச்னை பொது மக்களின் அபிப்பிராயமும், அரசியற் கட்சித் தலைவர்களின் அபிப்பிராயமும், அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் அபிப்பிராயமும் மந்திரி சபையின் அபிப்பிராயமும் தெரிந்த பின்னரே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று பிரதமர் தெரிவித்துள்ளார். இதன் சரியான அர்த்தத்தைத் தமிழ் எம். பி.க்கள் புரிந்துகொள்ளாமை வேதனைக்குரியதாகும் என்றும் திரு. மாசிலாமணி கூறினர். திரு. எஸ். பரமானந்தம் நன்றியுரை கூறினர்.

---

## புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, வியா.
கட்டைவேலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ எல்லைக்குட்பட்ட கூட்டுறவுபணியாளர் சங்கக் கூட்டம் திரு. சி. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் 'கூட்டுறவுப்பணியாளர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாகவும், சரிவரவும் செய்தாலே தங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தகுதியுள்ளவர்களாவார்கள்'' என்று கூறினர்.

புதியநிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு.சி. தாமோதரம்பிள்ளை, உப. தலைவர் திரு. வே. கணபதிப்பிள்ளை, காரியதரிசி: திரு.க. சின்னையா, உபகாரியதரிசி: திரு. சி. சின்னத்தம்பி, தனாதிகாரி: திரு. வ. கந்தசாமி, கணக்குப்பரிசோதகர் திரு. க.சிவபாலசிங்கம், திருவாளர்கள்: ஸி. வீரபாகு, கே. கந்தையா, வீ. சின்னத்தம்பி, க. கிருஷ்ணராசா, ஆகியோர் அடங்கிய நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

அனலைதீவு, வியாழன்
அனலைதீவு தெற்கு சனசமூக நிலையத்தின் 21-வது பொதுக் கூட்டம் திரு. சு. தயாபரராசாவின் தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் நடப்பு வருட நிர்வாகிகளாகக் கீழ்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் செ. யோகரா. உபதலைவர்: க. தம்பிராசா, காரியதரிசி: சு. தயாபரராசா, உபகாரியதரிசி இ. கதிரவேலு. தனாதிகாரி செல்வன் த. நடராசா, பெறுப்பாளர்: செல்வன் சு. சோமசுந்தரம். நிர்வாகசபை அங்கத்தவர்கள்: சோ. சரவணமுத்து, வே. பேரம்பலம், நா. பரம்சோதி. சு. பசுபதிப்பிள்ளை. போஷகர்கள். அ. ஆறுமுகம், ஆ. சுப்பையா, கு. சுப்பிரமணியம், வ. தம்பையா, [illegible]தன்.

---

## பெரியார்க்கு அஞ்சலி

சங்கானை, வியாழன்
சங்கானையில் இம்மாதம் 22-ம், 23-ம். 24-ம் திகதிகளில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டையொட்டி நிறுவப்பட்ட அரங்குகளுக்குச் சங்கானையைச் சேர்ந்த பெரியார்களின் பெயர்கள் சூட்டப்படவிருக்கின்றன.

நாகலிங்க சுவாமிகள் அரங்கு, அம்பலவாண நாவலர் அரங்கு, கதிரவேலுச் சட்டம்பியார் அரங்கு என்ற பெயர்கள் சூட்டப்படும். சைவத்தையும் தமிழையும் வளர்க்க இப்பெரியார்கள் பெரிதுமுழைத்து வந்தனர்.

---

## காந்தி சேவாசங்க ஆண்டுக் கூட்டம்

உருத்திரபுரம், வியா
அகில இலங்கை காந்தி சேவாசங்கத்தின் 18வது ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 23ந் திகதி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற விருப்பதாகவும், கூட்டத்தில் பல முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## முருகதாஸ் மீண்டும் வருவார்

நாவலப்பிட்டி, வியாழன்
பிரபல பக்திப் பாடகர் பித்துக்குழி முருகதாஸ்சுவாமிகளும்அவரதுகோஷ்டியினரும் ஜூன் முற்பகுதியில் யாழ்ப்பாணம் வருகின்றனர். இக் கோஷ்டியினரின் இன்னிசைக் கச்சேரிகள் முதலில் யாழ்ப்பாணத்திலும், பின்னர் திருக்கோணமலை, மலைநாடு, கொழும்பு முதலான இடங்களிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் இதற்கான ஏற்பாடுகள்செய்துள்ளனர். சில மாதங்களின் முன்னரும் பித்துக்குழி கோஷ்டியினர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

---

## கி.மு.சங்க நிர்வாகிகள்

சுழிபுரம், வியா.
பண்ணாகம் வடக்கு அம்பாள் கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சி. தங்கராசா, உபதலைவர்: நா. பரஞ்சோதி, காரியதரிசி: வே. தேவராசா, உபகாரியதரிசி: சி. சிவலிங்கம், தனாதிகாரி: செ. திருநாவுக்கரசு, உபதனாதிகாரி: ச. குமாரசிங்கம், விளையாட்டுக் காரியதரிசி: க. கனகரத்தினம், உதவியாளர்: க. விக்னேஸ்வர மூர்த்தி, நூல்நிலையப் பொறுப்பாளர்: த. தவராசசிங்கம், க. வேல்சாமி பாலன், நிலையப் பொறுப்பாளர்: சி. தர்மகுலசிங்கம், இ. தர்மராசா, இ. பாக்கியநாதன், நிர்வாகிகள்: ஆ. குருலிங்கம், ந. சற்குணசிங்கம், இ. பாலசுப்பிரமணியம், ஆ. வரதராசா, கோ. பால[illegible] மா. இராசையா.

## சேவை நலம் பாராட்டு விழா

வேலணை, வியா.
தீவுப்பகுதிக் காரியாதிகாரியாகச் சென்ற நான்கு வருடங்களாகக் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு. பி.எல். பற்றிக்கின் சேவைநலத்தைப் பாராட்டி இப்பகுதிமக்களால் வேலணை சரஸ்வதி வித்யாசாலை மண்டபத்தில் ஒரு விழா நடத்தப்பட்டது. திரு. வ. நவரத்தினம் எம். பி. தலைமையில் நடந்த இவ்விழாவில் வேலணை கி. ச. தலைவர் திரு. சுப்பிரமணியம் உட்படப் பலர் பாராட்டுரை நிகழ்த்தினர்கள்.

---

## வள்ளுவர் விழா

சுழிபுரம், வியாழன்
சில்லாலை வர்ணகுல வாலிபர் சங்கத்தினர் வள்ளுவர் விழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர். இம் மாதம் 23 ம் திகதி செவ்வாய்க்கிழமை சில்லாலையில் நடைபெறும் இவ் விழாவில் தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு கா. பொ. இரத்தினம் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்புப் பேருரை நிகழ்த்தவிருக்கின்றனர்.

---

## சைவப் புலவர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி
1966ம் ஆண்டுதென்னியந்திய சைவசித்தாந்தமகாசமாஜ்த்தியபரீட்சையில்சித்திபெற்றோர்விபரம்;-

சைவப்புலவர் 3ம்வகுப்பு வை. இராமகிருஷ்ண ஐயர், சுதிரேசன்குமாரமகா வித்தியாலயம், நாவலப்பிட்டி. இளஞ்சைவப்புலவர் 1ம்வகுப்பு செல்விக தங்கேஸ்வரியம்மா, பாலிகா மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி. 2ம்வகுப்பு. க. வேல்முருகு, சம்மாந்துறை, [கி.மா] 3ம்வகுப்புக. பொன்னையா, தென்புலோலி பருத்தித்துறை, பொ, தெய்வேந்திரம், பன்னாலை, தெல்லிப்பளை, செ. விஜயம், தொளஸ்பாகைவீதி, நாவலப்பிட்டி. சி. கந்தையா, சாந்தமேரி வித்தியாலயம், நாவலப்பிட்டி. பொ, தங்கவேலு, கதிரேசன் குமாரமகா வித்தியாலயம், நாவலப்பிட்டி.. சீ. பொற்பதி கதிரேசன்குமார வித்தியாலயம்நாவலப்பிட்டி. சைவப்புலவர்புகுமுகம்செல்வன்தனபாலசண்முகம் காங்கேசன் துறைவீதி வனோர்பண்ணை சி. கணபதிப்பிள்ளை, நீதிமன்றவீதிதிருக்கோவில். [கி.மா]

## பெற்றோர்-ஆசிரியர் சங்கம்

உடுப்பிட்டி, வியா
துன்னாலை வடக்கு காசிநாதவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க இவ்வருடத்திய. புதிய நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பபெற்றனர்.

போஷகர் திரு. க. மயில்வாகனம், தலைவர். திரு. வி. பொன்னையா, உபதலைவர் திரு. வ. நடராசா, செயலாளர்: திரு. வே. மார்க்கண்டு பொருளாளர்: திரு. க. வ, முருகேசு. பொதுச்சபை உறுப்பினர் ஐவர் இடம் பெற்றனர்.

---

## கி.மு.ச.தீர்மானங்கள்

புன்னாலைக்கட்டுவன், வியா
உரும்பராய் கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் திரு. ரி. தம்பித்துரையின் தலைமையில் நடைபெற்றபோதுபின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"லக்சலா" ஒன்று இங்கு திறக்கும்படி உள்நாட்டமைச்சர் வேண்டுவது கி.மு.ச. கட்டிடத்தைப் புதுப்பிப்பது இப்பகுதியில் பழுதடைந்த தபால் பெட்டிகளைத்திருத்துமாறு அதிகாரிகளைக்கோருவது.

---

## உதவிவித்தியாதிபதி சுற்றறிக்கை

புன்னாலைக்கட்டுவன், வியா.
பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களில்லாதபாடசாலைகள் உடனடியாகப்பெற்றோர்ஆசிரியர் சங்கங்கள் நிறுவவேண்டுமென்று தமது சுற்றறிக்கையில் உதவிவித்தியாதிபதி ஆர். ஆர். நவரத்தினம் கேட்டுள்ளார்.

---

## திருப்பணி

இமையாணன், வியா.
இமையாணன் வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஊர் மக்களின் பண உதவியுடன் இத் திருப்பணி வேலை நடைபெறுகின்றது.

---

## தபால் ஊழியர் வெற்றி

உடுப்பிட்டி, வியாழன்
கரவெட்டி தபாற்கந்தோர் ஊழியர்கட்கும் கரணவாய் கோஷ்டியினருக்குமிடையே ஏற்பட்ட கைப்பந்தாட்ட மோதலில் தபாற் கற்தோர் ஊழியர்கள் 3—0 ஆட்டங்களால் வெற்றியீட்டினர். தபாற் கந்தோர் வீரரான திரு. நமசிவாயம் திறமையாக விளையாடி இரசிகர்களின் பாராட்டைப் பெற்றுர்.


ராதா மணி மார்க்

**கேசரோகநிவாரணதைலம்**

கூந்தல் உதிர்தல், பூச்சிவெட்டு, புழுவெட்டு, ஆகிய கேச, ரோகங்களைக் குணப்படுத்தி பாதிக்கப்பட்ட இடங்களில் தலைமயிரை வளர்க்கும் சக்திவாய்ந்த கூந்தல் தைலம் எம்மிடம் உண்டு. இத்தைலத்தைப் பாவித்து வந்தால் கூந்தல் நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரும். மேற்கூறப்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட அநேகர் இத் தைலத்தைப் பாவித்து குணமடைந்துள்ளனர்.

எப்பொழுதும் எம்மிடம் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச் சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச்சேர்ந்த திரு. ஆர்.எஸ். கந்தசாமி பம்பாயில் நடைபெறும் தார்மீக புனருத்தாரண மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ளார். மாணவர்களை கல்வித்துறையில் எவ்வாறு ஊக்குவித்து இலக்கியம், நாடகம் முதலியவற்றைப்பயிற்றுவிக்கலாம் என இம் மாநாட்டில் ஆராயப்படும். இவர் சமூகசேவை கூட்டுறவுத்துறையில் பல தொண்டுகள் புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தேசிய ஆசிரியர் சங்கத்தின் தீவிர அங்கத்தவர்களிலொருவராவார்.

## கொழும்பு மாணவர் விஜய!!

புன்னாலைக்கட்டுவன், வியா.

தொண்டமானாற்றில் வடமாகாண விஞ்ஞான ஆசிரியர்சங்கத்தாரால்நடாத்தப்பட்டுவரும் நீரியல் பற்றிய ஆராய்ச்சிகளை அவதானித்து ஆராய்ச்சி செய்வதற்காக மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைச்சேர்ந்த ஐம்பது மாணவ ஆசிரியர் தொண்டமானாற்றுக்கு வந்துள்ளனர். ——

## காப்புறுதி தாபன வேலைநிறுத்தம்

### விசாரணைக்கமிஷன்?

கொழும்பு, வியா.

இன்றுடன் 80-வது நாளாகத் தொடர்ந்து நடைபெறும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்வேலைநிறுத்தம் பற்றி விசாரிக்க ஒருவரடங்கிய கமிஷன் நியமிக்கப்படலாமெனத்தெரியவருகிறது. இந்த ஆலோசனையை அரசாங்கம் தற்போதுபரிசீலனை செய்துவருகிறது.

# "1-ம் எதிரி நெஞ்சிலிருந்து கழுத்தில் கடித்தார்"

## யோகபுரம் கொலை வழக்கு

சாவகச்சேரி, வெள்ளி

"இறந்தவரும் நானும் எதிரிகளும் சம்பவம் நடந்த தினம் சாராயம்குடித்தோம் பின் முதல் எதிரியான சின்னத்தம்பி இறந்தவருக்கு அடித்தார், 2-ம் எதிரியும் அடித்தார்.

யோகபுரம் கொலை வழக்கில் சாட்சியமளித்த இராமநாதன் இராஜேந்திரம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் க. சின்னத்தம்பி, க. வல்லிபுரம், நா. சதாசிவம் ஆகிய மூவரும், இராமநாதன் வைத்திலிங்கத்தை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ், சண்முகநாதன் புறக்டர் வி. கனகசபையின் அனுசரணையுடன் ஆஜரானர்.

இராஜேந்திரம் மேலும் கூறியதாவது: நானும் இறந்த வைத்திலிங்கமும் அன்று எதிரி சின்னத்தம்பி வீட்டிற்குசென்றோம். அங்கு அவர் இல்லாததால் விஜயரத்தினம் வீட்டிற்கு சென்றோம். அங்குஏற்பட்ட சண்டையை நானும் விஸ்வரத்தினமும் தடுத்தோம் பின் நானும் இறந்தவரும் வீட்டைபோகப் போனபோது முதல் எதிரி பின்பக்கத்தால் ஓடிவந்து இறந்தவரைப்பிடித்து வீழ்த்தி வாருங்கோடா எனக்கூப்பிட்டார் 2-ம்எதிரி இறந்தவரின் வயிற்றில் காலால் மிதித்தார். 1ம்எதிரி நெஞ்சில் இருந்து கழுத்தில் கடித்தார். 3 ம் எதிரி தலையைப் பிடித்து அமத்தினர். நான் 'ஐயோ ஒன்றும் செய்யாதையுங்கோ' எனக் கத்தினேன். 1 ம், 2 ம் எதிரிகள் எனக்கு அடித்தனர். நான் பேரம்பலம் வீட்டிற்குப் போய்ச்சொல்லிவிட்டு விதானையார் வீட்டே போனேன்.

மேல்விசாரணை இம்மாதம் 29-திகதி நடைபெறும்.

## வரி விளம்பரம்

### WANTED

Incubator operators. Minimum experience Ten years. Salary Rs. 250/- inclusive of all allowances. Manager, Aruna Agencies, Alaveddy. 1819

### விற்பனைக்கு

க. பொ. த. [சாதாரணதர] வகுப்புக்குரிய 'தமிழிலக்கிய விளக்கம்' யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான 'சொக்கன்' எழுதியது. மிக விரிவான விளக்கக் குறிப்புக்களையும் மாணவர்க்கு மிக உதவியான பல விபரங்களையும் கொண்டது. விலை ரூபா 4-00. பிரதம விற்பனையாளர்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1817

### கல்வி

வகுப்புகள்

ஐக்கிய கலாசாலை தனது கிளை ஸ்தாபனங்களை கிளிநொச்சி, மன்னர், வவுனியா, மட்டக்களப்பு பகுதிகளில் திறக்கவிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது. ஜி. ஏ. கியூ, ஜி. சி. ஈ. [சாதாரண, உயர்தர] சிங்களம், ஆங்கிலம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், தையல் கலை, சங்கீதவகுப்புகள் நடாத்தப்படும். மாணவர்கள், பெற்றோர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1815

வகுப்புகள்

ஜி. சி. ஈ. கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்குநூறு வீதம் சித்தி அடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/பிரதானவீதி, முள்ளியவளை. 1816

வியாபாரம் பெருக
விளமபரம செய்க

# முக்கிய அறிவித்தல்

நான் 1966-ம் ஆண்டு மேமாதம் 2-ம் திகதியாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. யாக்கோப் மசலீன் சைமன் அவர்கள் முன்னிலையில் முடித்த அட்ரோனித் தத்துவம் கொடுக்கும் உறுதி இல. 227ன் படி முல்லைத்தீவு டாக்டர்காஜா மடலிலியார்செய்யது பரீத் மவுலானு அவர்களை என் உடமைகள், அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள், மற்றும் சகல உரிமைகட்கும் பொறுப்பாளியாக அவர்கட்கு அட்ரோனித் தத்துவத்தைக் கொடுத்திருந்தேன் என்பதையும் 1967-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியுடன் அவர்கட்குக் கொடுத்த அட்ரோனித் தத்துவத்தை ரத்துச் செய்துள்ளேன் என்பதையும் இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

அ. சு. அப்துல்காதர் காஜியார்

மெயின் வீதி,
முல்லைத்தீவு,
14-5-67. 1787

# "இறந்தவர் வீட்டில் எவருமில்லை; அதனல்நான் பயப்பட்டேன்"

## மூளாய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

"இறந்தவர் வீட்டில் சனசந்தடி இல்லை. பிரேதத்திற்கு அருகிலும் எவருமில்லை. அதனல் எனக்குப் பயமாக இருந்தது. 1-ம் எதிரி ஏதாவது செய்து போடுவார் என்றும் பயந்தேன்."

மூளாய் கொலைவழக்கில் சாட்சியமளித்த சி. பொன்னன் மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு பதினான்காவது தினமாக வடபகுதிஅசைஸ்கோர்ட்டில்நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு மேமாதம் 18-ம் திகதி மூளாயில் சுப்பர் முருகேசுவை, சுப்பர் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலைசெய்ததாகக்,குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் பி. இரகுபதி குறுக்குவிசாரணை செய்கையில் பொன்னன் கூறியதாவது: பயத்தினல் எனது வீட்டிற்குபோனேன். அங்கு என் மனைவியும் பிள்ளைகளும் இருந்தனர். 1-ம் எதிரி வளவிற்குள் தான் எனது வீடு இருக்கிறது.

வழ: 1-ம் எதிரி ஏதாவது செய்து போடுவார் எனப் பயந்தாயா? - ஆம்.

வழ: அப்படி பயந்திருந்தால் 1-ம் எதிரி வளவிற்குள் இருக்கும் உன் வீட்டிற்கு போயிருப்பாயா?-வீட்டிற்குத்தான் போனேன்.

நீதி: 1-ம் எதிரி வளவிற்குள் தான் உமது வீடு இருக்கிறதாம்?-ஆம்.

வழ: 1-ம், 2-ம் எதிரி தெற்குப்பக்கம்ஓடினர்கள்?-ஆம்.

வழ: அதை நீர் பார்த்தீர்?-ஆம்.

வழ: 1-ம் எதிரியால் ஆபத்து வரும் என நினைத்தீர்?-ஆம்.

வழ: அப்படி நீர் நினைத்தால் உமது வீட்டிற்கு போவதால் ஆபத்து கூடும் எனக் கருதவில்லைறா?-வீட்டிற்கு மனைவி, பிள்ளைகளிடம் போனேன். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

### எங்களைச் சேருங் . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

தது என்றும் அளிக்கப்பட்ட அந்தப் பட்டத்தை திருப்பிக் கொடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இக்கடிதத்தின் பிரதிகளை இவர்கள் பிரதமர், தொழில் அமைச்சர் ஜனப் முகமத், ஜனப் பதியுதீன் மாமூத் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார்கள்.

3-வது வெற்றி வாரம

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ண [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்

இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன் ராமண்ண

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர் சரோஜாதேவி
நடித்த
பெரியஇடத்துப் பெண்

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
Peter Finch
Yvonne Mitchell
in
THE MAN WITH THE GREEN CARNATIONS

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
David Niven
in
CAPTIVE CITY




கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

திருப்பி நிரப்பிய சீமந்து விற்பனை

திருகோணமலையில் திருப்பி நிரப்பிய சீமந்து தரம் "A" கீழ்காணும் விலைப்படி விற்பனைக்குள்ளது.

500 பைகள் வரை -- ரூ 8-05 சதப்படி திருமலை ஸ்ரோஸ்சில்
500க்கு மேல் -- ரூ 7-90 சதப்படி திருமலை ஸ்ரோஸ்சில்

சி. டபிள்யூ. ஈ. சீமந்து விற்பனைப் பகுதியிலிருந்து வாங்குதற்கான ஒழுங்குகள் செய்து கொள்ளலாம். வேலை நேரங்களில் நம் 2, வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.

ஜெனரல் மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சிங்களத்தேர்ச்சிபெருதோரை வேலைநீக்குவது செல்லாது’

## தொடர்ந்து போராட எழுதுவினைஞர் சங்கம் முடிவு

மட்டக்களப்பு, வியாழன் அரசாங்க எழுது வினைஞர் சங்க 6-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. ஆண்டறிக்கை சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தில் சிங்களத்தில் [ஜே.எஸ்.சி. தராதரம்] தேர்ச்சியடையாக காரணத்தால் சேவை உறுதிப்பாடு பெறமுடியாது கட்டாய பதவி நீக்கத்தை எதிர்நோக்கியிருக்கும் புதிய ஊழியர்களது நிலைபற்றி விரிவாக ஆராயப்பட்டது. இதுவரையில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் படி புதிய ஊழியர்களின் விஷயத்தில் வெற்றி காணமுடியாததால் புதிய ஊழியர்கள் சிங்களம் படித்துத் தேர்ச்சி பெற்று சேவை உறுதிப்பாடு பெறுவதற்குச் சங்கம் முயற்சிசெய்ய வேண்டும் என்ற கருத்தைச் சில உறுப்பினர்கள் தெரிவித்தனர். தமிழ்மொழி மூலம் கல்விகற்று அரசாங்கசேவையில் அமர்வதற்கான தேர்வுப் பரீட்சையில் தமிழ் மொழி மூலமே தோன்றிச் சித்தியெய்தியவர்களை சிங்களத்தில் தகைமையெய்யாத காரணத்தால் சேவை உறுதிப்படுத்தாது வேலைநீக்கம் செய்வது அரசவைச் சட்டத்தின் 29-ம் பிரிவின்படி தமிழ் பேசும் மக்களைப் பாரபட்சமாக நடத்தும் காரியமாகும் என்ற அடிப்படையில் ஆரம்ப காலம் முதல் கைக்கொள்ளப்பட்ட சங்கத்தின் அடிப்படைக் கொள்கையில் எவ்விதமான மாற்றமும் செய்யப்படக் கூடாது என்று சிலர் வன்மையாகக் கண்டித்தனர். இந்த வகையில் வேறுபட்ட இரு கருத்துக்களையும் முன்வைத்தே தலைவர் பதவிக்கும் ஏனைய பதவிகளுக்கும் தேர்தல் இரகசிய வாக்கெடுப்புமூலம்நடைபெற்று. அடிப்படைக் கொள்கையில் மாற்றம் கூடாது என்ற கருத்து அழுத்தம் திருத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிய தலைவர் திரு. ப. வித்தியானந்தசர்மா பேசியதாவது:-

சிங்கள மொழிச் சட்டத்தினால் தமிழ் பேசும் தொழிலாளர்கள், அவர்கள் அரசாங்க சேவையில் இருந்தாலும் சரி தனியார் துறையில் இருந்தாலும் சரி, தமது உரிமைகளை இழந்துவிடாத வண்ணம் பாதுகாக்கவே மொழிவழித் தொழிற் சங்கங்கள் தோற்றுவிக்கப் பட்டன.

தமிழ் பேசும் தொழிலாளர்களது நலவுரிமைகளைப் பாதுகாப்பதென்ற இலட்சியம் நிகழ்காலத்தில் உள்ள தொழிலாள வர்க்கத்தினரின் சார்பாக மட்டுமன்றி வருங்காலச் சந்ததியினரின் பொருட்டும் என்பதை நாம் நினைவிற் கொள்ளுவோம். நாம் எடுக்கும் நடவடிக்கைகள் நிகழ் காலத்தில் விரும்பிய பலனைத் தரவில்லையென்றால் அதற்காக எமது கொள்கையை விட்டுக்கொடுக்க முடியுமா? வருங்காலத்திலாவது எமது இலட்சியம் நிச்சயமாக வெற்றிபெறும் என்றுஉறுதிசொள்ளுவோம் இலட்சியம் இன்னும் கைகூடவில்லையென்றால் நாம் செய்யும் முயற்சிபோதாது என்றதுதான் அர்த்தம். இலட்சியத்துக்காக எந்த விதமான தியாகமும் செய்வதற்கும் நாம் தயாராக இருப்போமானுல், இடையில் நமக்குப் பாதகமாக வரும் எவ்விதமான பலன்களையும் கண்டு நாம் சோர்வடையமாட்டோம்.

புதிய ஆண்டுக்குரிய உத்தியோகத்தர் விபரம் வருமாறு,-

தலைவர் ப.வித்தியானந்த சர்மா. உபதலைவர்கள்: சு. வெற்றிவேலாயுதம், ச. ஜேசுரத்தினம், பொதுச் செயலாளர்: இ. இராமநாதன், துணைச்செயலாளர்கள் க. பத்மநாதன், ஆ. புவனேசன், பொருளாளர்: செ. கோடீஸ்வரன், துணைப் பொருளாளர்கள்: க. அன்னலிங்கம், பொ. த. இலங்கைநாதன், கணக்காளர்: த. சோமசுந்தரம்

21 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

கடந்த ஆண்டுச் செயற்குழுவினுல் சமர்ப்பிக்கப்பட்ட 27 தீர்மானங்களும் யாழ்ப்பாணக் கிளையினுல் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டன.

# மறைந்த எம். பி. கரு பிரதிநிதிகள்சபை அஞ்சலி

கொழும்பு, வியாழன் காலஞ்சென்ற நீர் கொழும்பு எம். பி. திரு. குவின்ரின் பெர்ணுண்டோவுக்கு இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்களை காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி. சில்லா சமர்ப்பித்தார். எதிர்க்கட்சியினர் சார்பில் திரு எம். பி டி. சிறிவர்த்தனு பேசினுர்.

திரு குவிண்டின் பெர்ணுண்டோ எல்லா அங்கத்தவர்களோடும் நல்லமுறையில் நடந்து கொண்டதாகவும், அன்பும் பண்பும் புகழும் கொண்ட உயர்ந்த மனிதராகவிளங்கினுர் என்றும், அட்வகேட்டாக பதவி ஏற்ற அவர் நீதிபரிபாலன சேவையில் மாஜிஸ்டிரேட்டாக இருந்து மாவட்ட நீதிபதியாக உயர்ந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் சார்பில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசினுர். சபை நிகழ்ச்சிகளின் பிரதி காலஞ்சென்ற திரு. குவிண்டின் பெர்ணுண்டோ குடும்பத்தினருக்கு அனுப்பும்படி சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இரவு 8-15 மணி முதல் தருமை ஆதீன புலவர் வஜ்ரவேலு முதலியார் ‘அப்பர் காட்டிய அருள்நெறி’ என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் இரவு 6 மணி முதல் 7 மணி வரை கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

முழு நாட்டுக்கும் நன்மை தரக் கூடிய இந்த திட்டத்தில் மீன்பிடி கூட்டுத்தாபனம் உடனே முழுமூச்சாக இயங்க வேண்டும்.

ஃ ஃ ஃ

சேது சமுத்திர திட்டத்தை கைவிடப் போவதாக இந்திய அரசாங்கம் சமீபத்தில் தெரிவித்ததை தமிழக முதலமைச்சர் திரு. அண்ணுதுரை ஆட்சேபித்து, எப்படியாவது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தாம் போராடுவதாக தெரிவித்துள்ளார். இத் திட்டம் நிறைவேறுமானுல் அராபிக் கடலிலிருந்து வங்காள விரிகுடாவுக்கு செல்லும் கப்பல்கள் இலங்கையின் தென் பாகத்தை சுற்றி வளைந்து செல்லாமல், பாக்கு நீரிணை வழியாக செல்ல முடியும். இதன் பலனுக கொழும்பு, காலி துறைமுகங்களின் செல்வாக்கு குறைந்து காங்கேசன்துறை, பண்ணை, ஊர்காவற்றுறை முதலிய துறைமுகங்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கலாம்.

மன்னுர் குடாவும், பாக்கு நீரிணையும் பெரிய கப்பல்கள் போக்குவரத்துக்கு இப்பொழுது ஏற்றவையல்ல. இங்கு தண்ணீரின் ஆழம் மிகக் குறைவு. சேது சமுத்திர திட்டத்தின் படி இந்த இடையூறுகள் யாவும் அகற்றப்படும். முன்பு ஐரோப்பிய கப்பல்கள் தென் ஆபிரிக்க அந்தலையை சுற்றியே இந்தியாவுக்கும் தூர கிழக்குக்கும் வந்து சேர்ந்தன. சுயேஸ் கால்வாய் வெட்டப்பட்ட பின்பு சுலபமான பாதை கண்டு பிடிக்கப்பட்டது போல, பாக்கு நீரிணை வெளியாக்கப்பட்டால்மேனுட்டிலிருந்து சென்னை, விசாகபட்டினம், கல்கத்தா, ரங்கூன் முதலிய இடங்களுக்கு செல்லும் கப்பல்கள் இக் குறுகிய வழியையே பின்பற்றும்.

அப்பொழுது எமது வடபகுதி துறைமுகங்களின் செல்வாக்கும் அதிகரிக்கும்.

—வழிப்போக்கன்

## தேசிய சுவீப்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

| | |
|---|---|
| 13 W 0007 | 44 O 0985 |
| 16 D 0917 | 15 M 0496 |
| 55 A 0851 | 46 O 0957 |
| 16 D 0923 | 46 M 0799 |
| 44 Y 0616 | 93 R 0477 |
| 16 X 0996 | 44 K 0824 |
| 30 Z 0139 | 22 W 0775 |
| 47 F 0018 | 18 P 0113 |
| 21 T 0826 | 49 R 0612 |
| 36 C 0823 | 20 M 0466 |
| 40 F 0255 | 37 S 0767 |
| 04 U 0599 | 14 G 0873 |
| 06 V 0824 | 44 E 0232 |
| 15 N 0036 | 22 B 0250 |
| 55 H 0092 | 48 C 0129 |
| 15 B 0519 | 38 O 0216 |
| 30 J 0601 | 12 L 0502 |
| 15 J 0117 | 23 V 0132 |
| 48 L 0852 | 36 N 0186 |
| 41 T 0429 | 23 Z 0048 |
| 20 H 0254 | 41 E 0440 |
| 18 D 0462 | 21 Q 0078 |
| 42 A 0065 | 09 L 0778 |
| 47 K 0845 | 11 D 0119 |
| 31 L 0641 | 53 B 0761 |
| 19 T 0678 | 17 Q 0480 |
| 33 C 0243 | 29 T 0765 |
| 23 L 0909 | 05 A 0009 |
| 18 W 0986 | 25 A 0367 |
| 48 S 0573 | 22 N 0106 |
| 30 E 0152 | 21 Q 0640 |
| 47 S 0974 | 34 M 0842 |
| 38 F 0970 | 20 M 0206 |
| 21 Z 0873 | 09 N 0855 |
| 32 F 0763 | 50 K 0482 |
| 08 W 0634 | 05 J 0170 |
| 40 R 0893 | 27 V 0777 |
| 12 J 0316 | 34 T 0895 |
| 39 J 0483 | 53 Y 0544 |
| 56 J 0666 | 34 G 0642 |
| 50 Y 0180 | 43 N 0398 |
| 19 R 0508 | 01 E 0680 |
| 17 A 0156 | 18 L 0544 |

# தீர்ப்பை அறிய முன்னர் தற்கொலைசெய்தார் வாலிபர்

## மட்டுவிலில் சம்பவம்

சாவகச்சேரி, வியாழன் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோட்டில் நடந்த வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட 22 வயதான வாலிபர் தீர்ப்பை அறியமுன்னர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் மட்டுவிலில் இன்று பிற்பகல் நடந்தது.

67-ம் ஆண்டு ஜனவரி 21-ம் தேதிமட்டுவில் தெற்கைச்சேர்ந்த தம்பையா கனகசிங்கத்தின் சைக்கிளைத் திருடியதாக, கதிரவேலு நடேசபிள்ளை என்ற வாலிபர் மீது அவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு, எதிரியான நடேசபிள்ளை குற்றவாளியாகக் காணப்பட்டு, இம்மாதம் 29-ம் தேதி தீர்ப்பு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட நடேசபிள்ளை இன்று பிற்பகல் 2 மணியளவில் தோட்டத்தில், நச்சுத்திராவக மருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் மரணவிசாரணை நடத்தினுர். டாக்டர் ஏ. ரி. நல்லையா பிரேதபரிசோதனை நடத்தினுர்.

மரணமான வாலிபர் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடையாததைத் தொடர்ந்து விவசாயம் செய்துவந்தாரென்றும் வாலிபருக்கு எதிராக நேற்று நடந்த இந்தவழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தாரென்றும், இன்றுமாலை தோட்டத்தில் நச்சுத்திராவகம் அருந்தியதை கனகசபை மகாலிங்கம் என்பவர்கண்டு மற்றவர்களுக்கு அறிவித்ததாகவும், ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரும் வழியில் அவர் மரணமானுரென்றும் விசாரணையின்போது கூறப்பட்டது. தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## செனட்டர் . , .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விளக்கப் பட்டிருக்கின்றது.

சூசா: இப்படி தமிழ் மக்களை நீங்கள் கண்ணுமூச்சி காட்ட முடியாது.

மந்திரி அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள்தமிழ் மக்களை நாங்கள் காப்பாற்றிக் கொள்கிறோம்.

முன்பதாக உள்ளூராட்சி சேவை மசோதா விவாதிக்கப்பட்டபோது செனட்டர் டொரிக்டி சூசா, உள்ளூராட்சி கமிஷனுக்கு அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் மந்திரியின் அதிகாரங்களைக் குறிப்பிட்டு தவறுன நபர் ஒருவரை மந்திரி தேர்ந்தெடுத்து விட்டால் என்ன செய்வது என்று கேட்டார். அப்பொழுதும் மந்திரிக்கும் அவருக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது.

## உள்ளூராட்சி . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லேயே இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் உள்ளூராட்சி கமிஷனுக்கு நியமனங்கள் செய்வதை மந்திரியின் அதிகாரங்களுக்குள் சேர்த்திருப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்த அதிகாரங்கள் மந்திரிக்கு இருந்தாலும் அப்படியான நியமனங்கள் செய்யும்போது உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க ஆலோசிப்பதாக தெரிவித்தார்.

### செனட்டில்

செனட்சபையில் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் உள்ளூராட்சி சேவை மசோதாவை சமர்ப்பித்தார். மசோதா மீதான விவாதம் ஆரம்பமாகியது.

## டாக்டர் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரில் வந்த மற்ருெருவர், அவருக்கு முன்னதாக காரிலிருந்து இறங்கி, திருஷ்டி கழிப்பதுபோல் ஒரு தேங்காயை சிதறுதேங்காயாக நிலத்தில் அடித்து உடைத்தார்.

சபைக்கட்டிடத்தில் டாக்டர் கொல்வின் கால் வைத்ததும் திரு. ஸ்டான்லி திலகரத்தினு, திரு. டி. பி. சுபசிங்கா, திரு. மைத்திரிபால சேனநாயகா ஆகியோர் மகிழ்ச்சியுடன் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

இரண்டாவது எலிஸபெத் மகராணிக்கு விசுவாசம் தெரிவித்து சிங்களத்தில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட கொல்வின் சபாநாயகருக்கு நம் நாட்டு முறைப்படி கரம் குவித்து மரியாதை செலுத்தினுர். இதன்பின் எதிர்க்கட்சியில் முன் ஆசனத்தில் டாக்டர் என். எம். பெரேராவுக்கும் திரு. லெஸ்லி குணவர்த்தனுவுக்கும் மத்தியில் சென்றமர்ந்தார். திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சபைக்குள் வந்ததும், டாக்டர் கொல்வின் ‘எழுந்து’ மரியாதை செலுத்தினுர்.

## சேர் ராஸீக். .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கலந்து ஆலோசிக்கப்படாததுகுறித்து கண்டித்தார். எனினும் அந்தப்பதவிக்கு எதிர்க்கட்சியினர் அபேட்சகரை நிறுத்தப் போவதில்லையென்று கூறிய டாக்டர் பெரேரா, சேர்ராஸீக் பரீத் பாரபட்சமின்றி நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பிரதம மந்திரி பதிலளிக்கையில் எல்லாக் கட்சியினரும் அகலவத்தை உபதேர்தலில் கவனம் செலுத்திக்கொண்டிருந்ததால் எதிர்க்கட்சியினருடன் கலந்து பேசுவதில் கூட வசதியில்லாமல் போய்விட்டது என்றும் சேர் ராஸீக் பரீதை நிறுத்துவது என்று இன்று காலை தான் முடிவு செய்யப்பட்டது என்றும் கூறினுர்.

## மரண அறிவித்தல்

சுழிபுரம் பெரியபரிகாரியாரின் பேரனும் தம்பிப்பிள்ளை வைத்தியரின் மகனும் ஆகிய இராசா[வைத்தியர்] காலமாகிவிட்டார். ஈமக்கிரிகை 20-ந் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும். சு. நல்லதம்பி.

2398

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org